මේ අයගේ උනන්දුව වගේම අධ්‍යාපන මට්ටම පිළිබඳවත් අපි සැලකිලිමත් වුණා. අවසානයේ අපි 24 දෙනෙකුව තෝරගත්තා මේ 24 දෙනා 12 බැගින් කණ්ඩායම් දෙකක් සකස් කළා. මේ කණ්ඩායම් දෙකේ බහුතරය වුණේ කාන්තාවන්.

## වැඩමුළුවක්.

අපේ මුල්ම සැලසුම වුණේ මේ කණ්ඩායම් දෙක සඳහා මුහුණට මුහුණ හමුවකින් විශේෂ පුහුණු වැඩමුළුවක් කරන්න. නමුත් කෝවිඩ් තත්ත්වය ඊට බාධාවක් වුණා. ඒ නිසා අපි Online ක්‍රමයට Zoom තාක්‍ෂණය ඔස්සේ වැඩමුළු සංවිධානය කළා.

කොළඹ පැවති වැඩමුළුව දිනකට පැය 3 බැගින් දින හතරකට සැලසුම් වුණා. එහිදී ඉගෙනුම් මාධ්‍ය වුණේ සිංහල භාෂාව ගාල්ල පැවති වාඩමුළුව දිනකට පැය 4 බැගින් දින 3කට සංවිධානය කෙරුණා. දෙමළ මාධ්‍ය උපයෝගීකරගෙනයි මේක සංවිධානය කෙරුණේ.

## අන්තර්ගතය

මෙම වැඩමුළුවේදී විශේෂ අවධානයක් යොමු කෙරුණේ. සමාජ මාධ්‍ය හරහා සිදු කෙරෙන වෛරී ප්‍රකාශ නතර කරන්නේ කොහොම ද?, ඊට ප්‍රතිචාර දැක්විය යුත්තේ කෙසේ ද?, ව්‍යාජ ප්‍රවෘත්ති (Fake News) හඳුනාගන්නේ කොහොම ද? ඊට ප්‍රතිචාර දැක්විය යුත්තේ කෙසේ ද?, සමාජ මාධ්‍ය හරහා ප්‍රචාරය වන වෛරී ප්‍රකාශ හෝ ව්‍යාජ පුවත් තවත් අයෙකුට නොයවා සිටීමේ වැදගත්කම බෙදාගතයුතු තොරතුරු මොනවා ද? ඒ වගේම කාන්තාවන්ට එරෙහිව සිදුවන වෛරී ප්‍රකාශ සඳහා ශ්‍රී ලංකාව තුළ වෙනම නීතියක් සහ ප්‍රතිසංස්කරණ අවශ්‍යද යන්න පිළිබඳවත් සාකච්ඡා කෙරුණා. භාෂණයේ නිදහසේ මුවාවෙන් කාන්තාවන්ට එරෙහිව කරනු ලබන වෛරී සහගත ප්‍රකාශවලට ඉඩදිය යුතු ද?, සුලුතර කාන්තාවන්ට එරෙහි වෛර ප්‍රකාශ සහ කාත්තාවන්ට එරෙහි සියලු ආකාරයේ වෙනස්කම් තුරන් කිරීමේ සම්මුතිය උල්ලංඝනය කෙරෙන්නේ කෙසේ ද? එමෙන්ම ලිංගිකත්වය මත පදනම් වූ වෙනස් කොට සැලකීමේ ශ්‍රී ලංකාවේ පවතින සංස්කෘතිය පිළිබඳව ද? මෙහිදී සාකච්ඡාවට ලක් කෙරුණා. ආගම්, ජනවර්ග අතර සාමය ගොඩනැගීමේ දී සමාජ මාධ්‍ය භාවිතය ඇතුළු කරුණු රැසක් මෙම වැඩමුළුවට අන්තර්ගත වුණා.

## සම්පත් දායකයෝ

මෙම වැඩමුළු සියල්ල මෙහෙයවීම සඳහා අදාල ක්ෂේත්‍රයන් පිළිබඳව විශේෂ දැනුමක් ඇති ප්‍රවීණ පුද්ගලයන් සම්බන්ධ කර ගැනුනා.

## You Tube වැඩසටහන් 4ක් ...

සමාජයේ පිළිගැනීමට ලක්වන විශේෂිත චරිත 4ක් සම්බන්ධ කර ගනිමින් වීඩියෝ පට 4ක් නිර්මාණය කෙරුණා. මේ වීඩියෝ පට විනාඩි 8ත් 12ත් අතර කාලයකට සීමා කෙරුණා. සිංහල භාෂාවෙන් සකස් කළ මෙම වීඩියෝ පට දෙමළ හා ඉංග්‍රීසි භාෂාවලටද පරිවර්තනය කෙරුණා.

## අත්දැකීම්

කෝවිඩ් 19 හමුවේ සිදුකළ මේ වැඩසටහන අපිට හොඳ අත්දැකීමක් ගෙන දුන්නා. අපේ සමහර සැලසුම් වෙනස් කරන්නත් වුණා. මේ පුහුණුවට ඉල්ලුම් කරපු බොහෝ දෙනා කැමති වුණේ. මුහුණට මුහුණ හමුවන පුහාණුවකට නමුත් Online ක්‍රමයට කියපු ගමන් වැඩි පිරිසක් සහභාගීත්වය මගහැරියා. ඒත් අපි අපේ අරමුණු ඉටුකරගන්න වෙනත් ක්‍රියාමාර්ග ගත්තා.

**අපි බය නෑ....**

ඔව්, මේ ව්‍යාපෘතිය සකස් වුණේම සමාජ මාධ්‍ය මඟින් පීඩාවට පත් කෙරෙන කාන්තාවන්ගේ ජීවිතය තැතිගැන්මකින් තොරව නැතිනම් බය නැතිව ගත කරන්න අවශ්‍ය වාතාවරණය ගොඩ නැගීමට ඒ අරමුණට මේ කණ්ඩායම් දෙක ප්‍රයෝජනවත් වුණා. වැඩසටහනෙන් ලබාගත් දැනුම ඒ අය ප්‍රජාවට ලබා දෙනවා දැන් ඒ අය දන්නවා. කළ යුතු හා නොකළ යුතු දේ. ඔවුන්ගේ ළඟම මිතුරන්වත් දැනුවත් කරනවා. ඒ විතරක් නෙමෙයි ඒ අයගේ සමාජ මාධ්‍ය ජාලා තුළත් ඔවුන් ක්‍රියාත්මකයි. මේක ඉදිරියට ගලා යන එකක්.

ඉතිං අපි දැන් බය නෑ . . . .

**ක්‍රියාත්මක කිරීම** - International Youth Alliance for Peace

# நாங்கள் பயப்படவில்லை

நாங்கள் பயப்படவில்லை... ஏன் இப்படி ஒரு தலைப்பு, யாரேனும் பயத்துடன் காணப்பட்டார்களா? அல்லது யாராவது பயமுறுத்துவதற்கு இருக்கிறார்களா? உண்மையில் இப்போது பயம் என்பது இல்லையா?

**விபத்துக்களை பார்க்கிறீர்களா?**

நாம் வாழும் சமூகமானது, அதிக நேரங்ககளில் பல விதமான ஏற்ற தாழ்வுகளுடன் ஒருநிலையற்று பயணிக்கிறது. நாம் விரும்பும் விடயங்களைப் போன்று, விரும்பாத விடயங்களும் சில நேரங்களில் சமூகத்திலும், எம்மிடையிலும் இடம்பெறுகின்றன. எனினும் ஒரு சில சமயங்களில் சமூகத்தில் நடக்கும் செயற்பாடுகளை பார்க்கும் போது, அதிர்ச்சியும் அதிர்ச்சியும், பயமும் ஏற்படுகிறது.

ஆனால் இடம்பெறும் ஒவ்வொரு செயல்பாடுகளைப் பற்றியும், நல்ல புரிந்துணர்வுடன் இருக்க முடியுமாயின், அதிர்ச்சியைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

**எவ்வாறெனினும்,**

சமூகத்தில் நடக்கும் ஒரு சில மோசமான செயல்பாடுகளால் , அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான். எனவே அந்தத் பாதிப்புக்களில் இருந்து, துன்புறுதத்தல்களின் இருந்து விடுபடுவதற்கு அவர்கள் போராட வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், அவர்கள் எப்போதும் அச்சத்துடனேயே வாழ நேரிடும்.

**அதிர்ச்சி**

எம் அனைவரது வாழ்விலும் 2020 மார்ச் மாதம் முதல் பாரிய அசாதாரணமான விடயமொன்று பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அது கொவிட் 19 வைரஸ் பரவலாகும். நாம் கதைக்கப்போகும் இந்த கதையும், கொவிட் 19 வைரசுடன் தொடர்புபட்ட கதைதான். இந்த விடயங்கள் தொடர்பில் அதிகம் நாம் கேட்கவும் பார்க்கவும் நேரிடுகிறது. சமூக ஊடகங்களினூடாக பல்வேறு வெறுப்புணர்வைத் தூண்டும் வகையான பேச்சுகள் அல்லது மற்றுமொரு நபரை புண்படுத்தும், இழிவாக பார்க்கும் வகையிலான கருத்துக்கள், அதேபோன்று போலியான செய்திகளும் சமூக ஊடகங்களில் சமூகமயமாக்கப்பட்டன. சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் இந்த மோசமான செயல்முறைக்கு பதில் வழங்கவும், அந்த நிலையை மாற்றியமைகக வேண்டுமென்ற எண்ணமும் எமக்கு ஏற்பட்டது. அதற்காகத்தான் நாங்கள் பொறுப்புடன், தீவிரமாக செயற்படுகின்றோம்..

**இலக்காக கொள்ளப்பட்டுள்ள குழுவினர்..**

சமூகத்தில் வெறுப்பு மிக்க , மோசமான பேச்சுக்கள் மற்றும் போலியான செய்திகளால் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பெண்களின் வாழ்க்கையும் கேள்விக்குரியாக மாறுகிறது. இந்நிலையில் குறித்த விடயங்களால் அதிகம் பாதிக்கப்படும் பெண்களை இலக்காக கொண்டு, செயற்திட்டமொன்றை முன்னெடுக்க நாங்கள் தீர்மானித்தோம். அதற்கென இளம் பராயத்தினர் சிறப்புடன் செயற்படுவார்கள் என்பதை அறிந்து, அவர்களை குழவில் இணைக்க தீர்மானித்தோம்.

**அதற்காக நாங்கள்...**

எமது இந்த வேலைதிட்டத்திற்காக, நாட்டில் இரண்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகள். மாவட்டங்களை தெரிவுசெய்கையில், அங்கு செறிந்து வாழும் மக்கள் சமூகத்தினர் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. கொழும்பில் செறிந்து வாழும் சிங்கள சமூகமும், காலியில் அதிகளவில் வாழும் தமிழ் பேசும் மக்களும் இதற்கென தெரிவுசெய்யப்பட்டனர்.

முதலில் நாம் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி, திறந்த மட்டத்தில் திட்டத்தில் இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பை விடுத்தோம். இந்த வேலைத்திட்டத்தில் இணைய விரும்புவோர் விண்ணப்பிக்குமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டது. எமது கோரிக்கையை ஏற்று, சுமார் 50க்கும் மேற்பட்டோர் பதில் அளித்தனர். இருப்பினும், எமக்கு கிடைத்த விண்ணப்பங்களில் இருந்து, எங்கள் திட்டத்திற்கு பொருத்தமானவர்களை மாத்திரம் நாங்கள் தேர்ந்தெடுத்தோம். ஏனென்றால் இந்த திட்டத்தில் இணைபவர்கள், சமூக ஊடகங்களுக்கு பதிலளிக்கும் திறன் கொண்டவர்களாகவும், ஏனைய நபர்களை தெளிவுபடுத்தும் திறன் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அதுவே எமது தேவையாகவும் இருந்தது.

இதனிடையே வேலைத்திட்டத்திற்கென நாம் தெரிவுசெய்த நபர்களின் பொறுப்பு, கடமையுணர்வைப் போன்று, அவர்களின் கல்வி நிலை குறித்தும் நாங்கள் அதிக கவனம் செலுத்தினோம். இறுதியில் எமக்கு தேவையான 24 பேரை நாம் தேர்ந்தெடுத்தோம். ஆனால் இந்த 24 பேரும், தலா 12 பேரைக் கொண்ட இரண்டு அணிகளாக உருவாக்கப்பட்டனர். இந்த இரண்டு குழுக்களிலும் பெரும்பான்மையானவர்கள் பெண்களாகவே இருந்தனர்.

**பயிற்சிப்பட்டறை.**

இந்த இரண்டு குழுக்களையும் ஒன்றாக இணைத்து, நேரடியாக விசேட பயிற்சிகளை வழங்குவதே எமது முதற்கட்ட திட்டமிடலாக காணப்பட்டது. ஆனால் கோவிட் 19 வைரஸ் பரவல் நிலை, இதற்கு தடையாக இருந்தது. எனவே நாம் சூம் (ணுழழஅ) தொழில்நுட்பத்தின் மூலம் ஒன்லைன் (ழுடெைநெ) முறையில் பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தோம்.

கொழும்பில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையானது, நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில், நான்கு தினங்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டது. அதன்போது கற்றல், கற்பித்தல் மொழியாக சிங்களம் காணப்பட்டது. காலியில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டரையானது, ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில், 3 நாட்களுக்கு ஒழுங்குசெய்யப்பட்டது. தமிழ் மொழியில் கற்பிக்க, அங்கு சகல ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டது.

**உள்ளடக்கங்கள்**

இந்த செயலமர்வில் விசேட கவனம் செலுத்தப்பட்ட விடயமானது, சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் காழ்ப்புணர்வான வெறுப்புமிக்க , குரூர பேச்சுகளை நிறுத்துவது எப்படி? அதற்கு எவ்வாறு பதிலளிப்பது? போலிச் செய்திகளை (குயஉம நெறள) எவ்வாறு கண்டறிவது? அதற்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும்? சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் வெறுப்பூட்டும் மற்றும் குரூர கருத்துக்கள் அல்லது போலிச் செய்திகள் மற்றுமொருவரை சென்றடையாமல் இருப்பதன் முக்கியத்துவம். இதற்கென பகிர வேண்டிய மிக முக்கியமான தகவல் என்ன? மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு சமூக ஊடகங்களின் பயன்பாடு உட்பட பல தரப்பட்ட தலைப்புகளில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

**வள பங்களிப்பாளர்கள்**

இந்தப் பயிற்சிப் பட்டறைகள் அனைத்தும், விடயத்துடன் தொடர்புடைய துறைகளில் சிறப்பு அறிவு கொண்ட அனுபவம் வாய்ந்த , நிபுணர்களை இணைத்துக்கொண்டு நடத்தப்பட்டது.

**4 யூட்யூப் நிகழ்ச்சி நிரல்கள்...**

சமூகத்தில் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட 4 சிறப்பு கதாபாத்திரங்களை உள்ளடக்கி நான்கு வீடியோ பதிவுகள் உருவாக்கப்பட்டன. குறித்த வீடியோ பதிவுகள், 8 நிமிடம் முதல் 12 நிமிடங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. இந்த காணொளி பதிவுகள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு, பின்னர் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**அனுபவம்**

கொவிட் 19 வைரஸ் பரவல் நிலைக்கு மத்தியில், முன்னெடுத்து செல்லப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம், எங்களுக்கு நல்ல அனுபவத்தை அளித்தது. நாம் ஏற்கனவே ஒழுங்குசெய்திருந்த சில திட்டங்களையும் மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. எமது பயிற்சித் திட்டத்திற்கு, விண்ணப்பித்திருந்த பலர் இதில் நேரடியாக நடத்தப்படும் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள அதிக விருப்பம் கொண்டிருந்தனர். ஆனால் ஒன்லைன் முறையில் பயிற்சிகள் வழங்கப்படும் என கூறியவுடன், பலர் பெரும்பாலானோர் இதில் பங்கேற்பதைத் தவிர்த்தனர். எனினும் நாம் எமது இலக்கை உரிய முறையில் அடைவதற்கு, மாற்று நடவடிக்கைகளை தெரிவுசெய்தோம்.

**எமக்கு பயம் இல்லை....**

ஆமாம், எமது இந்தத் திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்ததும், சமூக ஊடகங்களால் ஒடுக்கப்பட்ட பெண்கள் பயமோ, அச்சமோ இல்லாமல் தமது வாழ்க்கையை கொண்டு செல்லும் சூழலை உருவாக்க, இந்த இரண்டு குழுக்களும் முக்கியப் பங்காற்றினர். அவர்கள் பயிற்சித் திட்டத்தினூடாக பெற்றுக் கொண்ட அறிவை சமூகத்திற்கு வழங்குகின்றனர். அத்துடன் நாம் செய்ய வேண்டிய விடயங்கள் மற்றும் செய்யக்கூடாத விடயங்கள் பற்றி இப்போது அவர்கள் நன்று அறிந்து வைத்துள்ளனர். அவர்களின் நெருங்கிய நண்பர்களுக்கு தெளிவுபடுத்தல்களை வழங்குதல், அவர்களின் சமூக ஊடகங்களிலும், அவர்கள் செயற்பாட்டில் இருக்கின்றனர். இந்த விடயம் தொடர்ந்தும் முன்னோக்கி செல்லக்கூடிய ஒன்றாகும்.

அதனால் நாங்கள் இப்போது பயப்படவில்லை.

செயற்படுத்தல் - International Youth Alliance for Peace

# ජගත් පුරවැසියෝ ....

## පුරවැසියෝ ...

ඕනම රටක ඉන්නව නේ පුරවැසියෝ. අපේ රටෙත් පුරවැසියෝ ඉන්නවා. ඒ අයට අපි කියනවා ශ්‍රී ලාංකික පුරවැසියෝ කියලා . . .

හැබැයි මේ ව්‍යාපෘතිය ඊට වෙනස් එකක්, බලන්නකෝ මෙතනදී කතා කරන්නේ ජගත් පුරවැසියෝ සම්බන්ධව, ඕනෑම රටක පුරවැසියන්ගේ යම් යම් ගති ලක්ෂණ දකින්න පුළුවන්. ඉතිං කොහොම කෙනෙක් ට ද ජගත් පුරවැසියෙක් කියන්නේ? මොනවද මේ අයගේ ගති ලක්ෂණ?, ඒ අයට වෙනම අනන්‍යතාවයක් තියෙනවද?

## "ඇයි, ජගත් පුරවැසියෙක්. . . ."

මේ තරමක් පුළුල් මාතෘකාවක් විදියට මුලදී අපට දැනෙන්න පුළුවන්. මොකද අපිට හුරු ඒ ඒ රටවලට සීමා උන පුරවැසියන් ගැන නේ. අපි ගත්තොත් ලාංකික පුරවැසියෝ.

පුරවැසියෝ ගැන කතා කෙරුවට අපේ සමාජයේත් පුරවැසියෝ කියන්නේ කවුද කියන එකත් ඇතැම් අයට ගැටළුවක්.

කොහොම උනත් මේ ව්‍යාපෘතියේ අරමුණ වෙලා තියෙන්නේ, ජගත් පුරවැසියෙක් නිර්මාණය කර ගැනීම.

## ඇයි මේ වෙලාවෙ මෙහෙම එකක්. . . .

මේ ව්‍යාපෘතිය ගොඩනැගෙන්නෙම කෝවිඩ් 19 හමුවේ රටතුළ ඇතිකරන ගැටළුත් එක්ක, මෙතනදී හැමෝම දකින නැතිනම් අවධානය යොමු කරන්නේ පහසුවෙන් හඳුනාගන්න ගැටළුවලට, ඒ තමයි සෞඛ්‍ය ආර්ථික ගැටළු, හැබැයි කෝවිඩ් එක්ක රටතුළ ඇතිකරපු බරපතල ගැටළුවක් ගැන බොහො දෙනාගේ අවධානය යොමු වුණේ නෑ. නමුත් මේ ව්‍යාපෘතිය දකිනවා ඒ ගැටළුව.

අපේ සමාජයේ විවිධ ජනවර්ග අතර අන්‍යෝන්‍ය විශ්වාසය බිඳ වැටීම, සංස්කෘතික ගැටුම්, පුද්ගලයින්ව වෙනස්කොට සැලකීම, මේක බරපතල මානුෂීය ගැටළුවක්. රටක සංහිඳියාව ඇති කිරීමට බාධාවක්. මේ ගැටළුව උග්‍ර කරන්න සමාජ මාධ්‍ය දක්වපු දායකත්වය විශාල බේදවාචකයක්.

මේ වාතාවරණය වෙනස් කරලා සමාජය තුළ සංහිඳියාවක් ඇති කිරීමේ අවශ්‍යතාව මේ ව්‍යාපෘතිය හඳුනගන්නවා.

## ආරම්භය . . . . .

මුලින්ම තේරුම්ගත යුතු දෙයක් තමයි මේක දිගු කාලීන වැඩපිළිවෙලක් බව. මොකද ජගත් පුරවැසියෙක් නිර්මාණය වීම පහසු කාර්යයක් නෙවෙයි. හැබැයි අපහසුයි කියලා අත්හරින්නත් බෑ.

## මොකද වෙන්නේ,

මෙතනදී ආරම්භක පියවර විදියට තරුණ කණ්ඩායමක් එක්රැස් කර ගැනීමට සැලසුම් කරගන්නවා. ඒ කණ්ඩායමේ සාමාජික සංඛ්‍යාව දහ දෙනෙක් බවට තීරණය වෙනවා. ඉතිං මේ දහ දෙනා තෝරාගැනීම සඳහා සමාජ මාධ්‍ය භාවිත කරලා විවෘත ආරාධනාවක් කෙරෙනවා. මෙහෙම කරපු ආරාධනාවට තරුණයෝ 120 දෙනෙකුගේ ප්‍රතිචාර ලැබෙනවා. හැබැයි ඒ අතුරින් සුදුසුකම් ලබපු දහ දෙනෙක් මේ කණ්ඩායමට තෝරා ගන්නවා. මේ දහ දෙනා ලංකාවේ පළාත් තුනක් නියෝජනය කරනවා. ඒ වගේම

තරුණියන් හත් දෙනෙකුට සහ තරුණයන් තුන් දෙනෙකුට මේ කණ්ඩායම් සීමා වෙනවා. මේ අයගේ වයස් සීමාව අවුරුදු 18 ත් 29 ත් අතර,

### මේ අයට මොකද වෙන්නේ.

මේ කණ්ඩායම හරි අපූරු අත්දැකීමක් සඳහා යොමු කරනවා. ඒ තමයි වත්තල ප්‍රදේශයේ විශේෂ ස්ථානයක පුහුණු වැඩමුළුවකට යොමු කිරීම. මේක දින 3ක නේවාසික පුහුණු වැඩමුළුවක්. කෝවිඩ් 19 වාතාවරණය තුළදී මෙහෙම නේවාසික පුහුණු වැඩමුළුවක් සංවිධානය කිරීම අමාරු වැඩක්. නමුත් මේක ක්‍රියාත්මක කෙරුණා.

### කොහොමද පුහුණුව

මේ පුහුණුව, පුහුණු කරුවන් පුහුණු කරවීමේ වැඩමුළුවක් වශයෙන් හඳුන්වන්න පුළුවන්. මෙතනදී මේ තරුණ කණ්ඩායමට ජගත් පුරවැසියන් සම්බන්ධව දැනුමක් ලබා දෙනවා. කොහොම කෙනෙක් ද ජගත් පුරවැසියෙක් කියන්නේ කියලා. ඒ අයගේ හැසිරීම් හා ගති ලක්ෂණ සම්බන්ධව දැනුවත් කෙරෙනවා. (උදාහරණයක් විදියට ජගත් පුරවැසියෙක්, ලෝකයේ ඇති සංස්කෘතීන් සම්බන්ධව දැනුමක් අවබෝධයක් ඇති අයෙක්.  අන් අයගේ සංස්කෘතීන්ට ගරු කරන කෙනෙක්, ස්ත්‍රී පුරුෂ සමාජ භාවය ගැන අවබෝධයක් ඇති මානුෂීය ගති ලක්ෂණ ඇති නිදහස් මතධාරියෙක්.) ඒ වගේම මෙහිදී මානව හිමිකම් සම්බන්ධව විවිධ මතවාදයන් පිළිබඳව සාකච්ඡා කෙරුණු අතර, සමාජයේ ඇතිවන විවිධ අවස්ථාවලට උචිත ආකාරයට හැසිරීම් පවත්වා ගැනීම පිළිබඳව ද මෙම පුහුණුවේදී දැනුවත් කෙරුණා.

ඒ වගේම මෙම කණ්ඩායම තවත් කුඩා කණ්ඩායම් තුනකට වෙන්වෙලා ඔවුන් හඳුනාගන්නා ලද සමාජයීය ගැටළු තුනක් සම්බන්ධව අධ්‍යයනය කොට ඊට විසඳුම් ඉදිරිපත් කරනවා. මොවුන්ගේ මාතෘකා බවට පත්වෙන්නේ . . . . .

තරුණ ප්‍රජාවේ අවශ්‍යතා මොනවා ද?

සමාජ මාධ්‍ය, සංහිඳියාව හා සාමයට ඇතිකරන බලපෑම

ස්ත්‍රී පුරුෂ සමාජ භාවය පිළිබඳව, (සංක්‍රාන්තික ලිංගිකයින් . . . .)

## තවත් පියවරක්

Zoom තාක්ෂණය භාවිත කරමින් තරුණ තරුණියන් 80 දෙනෙකු ඉලක්ක කරමින් විශේෂ දැනුවත් කිරීමේ වැඩසටහනක් ද දියත් කෙරෙනවා. මෙහිදී කිසියම් කතන්දරයක් උපයෝගී කර ගනිමින් සංහිඳියාව ගොඩ නගන්නේ කෙසේ ද යන්න සාකච්ඡා කෙරුනා.

### ඡායාරූප යොදාගැනීම

මේ තවත් දැනුවත් කිරීමේ ක්‍රමවේදයක් මේ ක්‍රියාකාරකම තුළ සිදුවූයේ විවෘත ආරාධනාවකින් ඡායාරූප ගෙන්වා ගැනීමයි. එහි දී ඡායාරූප 200 ක් මේ සඳහා ලැබී තිබුණා. ඉන් වඩාත් සුදුසු ඡායාරූප 50 ක් තෝරා ගෙන විශේෂ Facebook පිටුවක් තුළින් ප්‍රසිද්ධියට පත් කෙරුණා. මෙම ක්‍රියාකාරකම් සියල්ල සිදු කෙරුණේ සංස්කෘතික පුරවැසියන් නිර්මාණය සඳහා යන ගමන වෙනුවෙන්

### ගමන කොහොම ද?

ඕනෑම ගමනක් යනකොට බාධා ඇති වෙනවා නේ. මේකටත් බාධා ඇති වුණා. විශේෂයෙන්ම කෝවිඩ් 19 නිසා සමාජය තුළ පැවති නීති රීති. මෙහිදී විශේෂ කණ්ඩායමේ හමුවීම් පවත්වාගෙන යාමට අපහසු වුණා.

සෙසු පුද්ගලයින් හමුවීම අපහසු වීමත් විශේෂයෙන් සඳහන් කළ යුතු යි. නමුත් මෙම බාධක අතුරින් තම අරමුණු කරා යන්නට මෙම ව්‍යාපෘතිය උත්සාහ ගෙන තියෙනවා.

## ජගත් පුරවැසියන් නිර්මාණය

මේක දිගුකාලීන වැඩපිළිවෙලක හොඳ ආරම්භයක් වුණා. විශේෂයෙන් ම දහ දෙනාගේ කණ්ඩායම ශක්තිමත් කණ්ඩායමක් වුණා. මේ කණ්ඩායමේ හිටපු එක් තරුණියක්, ඇය මුස්ලිම් ජාතික තරුණියක්. ඇයගේ ඇතැම් සංස්කෘතික ලක්ෂණ මේ වැඩේට බාධාවක් විදියට මුලින් ඇයටත් ඇයගේ පවුලේ අයටත් දැනුනා. නමුත් මේ සම්බන්ධයෙන් දැනුවත් කිරීම් තුළින් මේ තත්ත්වය මගහැරුණා. ඇය දක්ෂ ලෙස එම ක්‍රියාදාමයට සම්බන්ධවීම සාධනීය ලක්ෂණයක්.

ඒ විතරක් නෙමේ, මේ කණ්ඩායමේ හැමෝම තවත් කණ්ඩායම් එක්ක සම්බන්ධතා පවත්වනවා. ඉතිං මේ ලබාගත් දැනුම ඒ අයත් එක්ක බෙදාගැනීම සිදුවුණා.

ඇයි, ඡායාරූප 50 ක් උපයෝගී කරගෙන සමාජය දැන්වත් කිරීම.

Zoom සාකච්ඡාවට සම්බන්ධ වූවන් තුළ ඇතිවූ දැනුම,

ඒ වගේම, මේ ව්‍යාපෘතියේ පෙර සහ පසු ඇගයීම්වලින් ලැබුණු ප්‍රතිචාරයන් ද හොඳ මට්ටමක තිබුණා.

මෙම ව්‍යාපෘතිය ජගත් සංස්කෘතික පුරවැසියන් නිර්මාණයට යන ගමනක්. එය අදට පමණක් සීමා වූවක් නොවේ. ''හෙට දවසේත් මේ ගමන යා යුතුව තියෙනවා.''

**ක්‍රියාත්මක කිරීම - ඔෂාන් ගුණතිලක**

# உலக குடிமக்கள்...

**குடிமக்கள். . .**

சகல நாடுகளிலும் குடிமக்கள் இருக்கிறார்கள். நம் நாட்டிலும் குடிமக்கள் உள்ளனர். அவர்களை நாம் இலங்கை குடிமக்கள் என்கிறோம். . .

ஆனால் இந்த வேலை திட்டம் அதற்கு வேறுபட்டது, பாருங்கள் இங்கே நாம் உலகளாவிய ரீதியிலான குடிமக்களைப் பற்றி பேசுகிறோம். எந்தவொரு நாட்டிலும் உள் குடிமக்களிடம் ஒரு சில பண்புகளை காண முடியும். அப்படியானால் எப்படிப்பட்ட ஒருவரை உலக குடிமகன் என்று அழைக்க முடியும்? அவர்களிடம் காணப்படும் குணாதிசயங்கள் என்ன? அவர்களுக்கென தனி அடையாளம் இருக்கிறதா?

**"ஏன், உலக குடிமகன். . . ."**

இதுவொரு பரந்த விரிவான தலைப்பாக முதலில் நாம் உணரலாம். ஏனென்றால் நமக்குத் தெரிந்த நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட குடிமக்களே நமக்கு பரிச்சயமானவர்கள். எம்மை எடுத்துக்கொண்டால், இலங்கைப் பிரஜைகள்

குடிமக்கள் தொடர்பில் கதைத்தாலும், எமது சமூகத்தில், நமது குடிமக்கள் யார் என்பதில் சிலருக்கு சிக்கல் உள்ளது.

இருப்பினும், இந்த திட்டத்தின் நோக்கமாக இருப்பது, உலகளாவிய குடிமகனை உருவாக்குவதாகும்.

**இந்த நேரத்தில் ஏன் இவ்வாறான ஒன்று...**

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, நாட்டில் கோவிட் 19 வைரஸ் பரவலினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு அனைவரும் எளிதாக அடையாளம் காணக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றனர். அதுதான் சுகாதார மற்றும் பொருளாதார பிரச்சனை. ஆனால் கொவிட் உருவாக்கிய கடுமையான பிரச்சனைகளை தொடர்பில், நாட்டில் பலரும் கவனம் செலுத்தவில்லை. ஆனால் இந்த வேலைத்திட்டம் அந்த சிக்கல்கள் தொடர்பிலேயே சுட்டிக்காட்டுகிறது.

நமது சமூகத்தில் பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையே பரஸ்பர நம்பிக்கையின் முறிவு, கலாச்சார மோதல்கள், தனிநபர்களுக்கு எதிரான பாகுபாடு, இது ஒரு தீவிர மனிதாபிமான பிரச்சனையாகும். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது பாரிய தடையாக உள்ளது. இந்தப் பிரச்சனையை அதிகப்படுத்த சமூக ஊடகங்களின் பங்களிப்பு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த நிலைமையை மாற்றி, சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த திட்டம் எடுத்துரைக்கிறது.

**ஆரம்பம் . . . . .**

இது ஒரு நீண்ட கால திட்டம் என்பதை, அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் உலகளாவிய குடிமகனை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல. ஆனால் அதனை கடினமானதென நினைத்து எம்மால் கைவிடவும் முடியாது.

**என்ன நடக்கிறது,**

இங்கு ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, இளைஞர்கள் குழுவை ஒன்று திரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்து என நிர்ணயிக்கப்படுகிறது. எனவே இந்த பத்து

பேரையும் உரிய முறையில் தேர்ந்தெடுக்க, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி திறந்த அழைப்பு விடுக்கப்படுகிறது. இவ்வாறு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு 120 பேரிடமிருந்து பதில் கிடைக்கிறது. இருப்பினும், இந்த அணிக்கு தகுதியான பத்து பேர் , விண்ணப்பதாரிகளிடமிருந்து தெரிவு செய்யப்படுகிறார்கள். குறித்த பத்து பேரும், இலங்கையின் மூன்று மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றன. மேலும், இந்தக் குழுவில், ஏழு இளம் பெண்கள் மற்றும் மூன்று இளைஞர்கள் என வரையறை செய்யப்படுகிறது. அவர்கள் 18 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களாக காணப்பட்டனர்.

**இவர்களுக்கு என்ன நடக்கிறது.**

இந்த குழுவினர் மிகவும் சிறப்பான அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கென அனுப்பப்படுகின்றனர். அதாவது வத்தளை பகுதியிலுள்ள உள்ள விசேட இடத்தில் பயிற்சி நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இது 3 நாள் தங்கியிருந்து பயிற்சி வழங்கப்பட்ட செயன்முறையாகும். கொவிட் 19 சூழலில் இதுபோன்ற தங்கியிருந்து பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்வது கடினமான விடயமொன்றாகும். ஆனாலும் இது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

**பயிற்சி எப்படிப்பட்டது**

இந்த பயிற்சியை, பயிற்சியாளர்களுக்கு பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியாக குறிப்பிட முடியும். இங்கு இந்த இளைஞர் குழுவினருக்கு, உலக குடிமக்கள் பற்றிய அறிவு வழங்கப்படுகிறது. எத்தகைய நபரை உலகளாவிய குடிமகன் என்று சொல்ல முடியும். அவர்களின் நடத்தை மற்றும் குணநலன்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. (உதாரணமாக, உலக குடிமகன், உலக கலாச்சாரங்களை பற்றி அறிந்தவர், பிறர் கலாச்சாரத்தை மதிக்கும் நபர், மனிதாபிமான குணம் மற்றும் பாலின புரிதல் கொண்ட சுதந்திர சிந்தனையாளர்.) மேலும், மனித உரிமைகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. இப்பயிற்சியில் சமூகத்தில் ஏற்படும் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதேபோன்று குறித்த குழுவினர் மேலும் 3 சிறு குழுக்களாக பிரித்து, அவர்கள் அடையாளம் காணும் 3 சமூகப்பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வு செய்து, தீர்வுகள் முன்வைக்கப்படும். அதுவே அவர்களின் தலைப்புகளாகவும் காணப்படுகிறது..

இளைஞர் சமுதாயத்தின் தேவை என்ன?

நல்லிணக்கம் மற்றும் அமைதியில், சமூக ஊடகங்களின் தாக்கம்

ஆண், பெண் சமூக பாலினம் தொடர்பில், (திருநங்கைகள்)

**மற்றுமொரு நடவடிக்கை**

சூம் (Zoom) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சுமார் 80 இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு, விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு ஒரு குறிப்பிட்ட கதையைப் பயன்படுத்தி, நல்லிணக்கத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

**புகைப்படங்களைப் பயன்படுத்துதல்**

மற்றுமொரு தெளிவுபடுத்தல் வேலைத்திட்டமே இதுவாகும். இந்த செயற்பாட்டினூடாக திறந்த முறையிலான அழைப்பின் மூலம் புகைப்படங்களைப் பெறுவதாகும். குறித்த செயற்பாட்டின் கீழ், இதற்கென சுமார் 200 புகைப்படங்கள் பெறப்பட்டன. அவற்றில் மிகவும் பொருத்தமான 50 புகைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேஸ்புக் பக்கத்தினூடாக பிரபலமாக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கலாச்சாரத்தை மதித்து அதன்வழி நடக்கும் குடிமக்களை உருவாக்கும் பயணத்திற்காக செய்யப்பட்டது.

**பயணம் எப்படிப்பட்டது?**

எந்தப் பயணத்தை மேற்கொள்ளும்போதும், அதில் தடைகள் ஏற்படுமல்லவா. இந்த வேலைத்திட்டத்தின்போதும், தடைகள் பல ஏற்பட்டன. குறிப்பாக கொவிட் 19 காரணமாக சமூகத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த சட்டதிட்டங்கள். இதன்போது சிறப்புக் குழுக் கூட்டங்களை ஒழுங்குசெய்து முன்னெடுத்துச்செல்வது கடினமாக இருந்தது. ஏனைய மக்கள் தரப்பினரை சந்திப்பதில் கடினமாக காணப்பட்டது, உண்மையில் விசேடமாக குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். ஆனாலும் இந்த தடைகளுக்கு மத்தியில், தமது நோக்கங்களை நோக்கி செல்வதற்கு இந்த வேலைத்திட்டங்களினூடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**உலகளாவிய குடிமக்களை உருவாக்குதல்**

இது ஒரு நீண்ட கால திட்டத்திற்கு, நல்ல தொடக்கமாக அமைந்தது. விசேடமாக பத்து பேரைக் கொண்ட அணி பலமான அணியாக இருந்தது. இந்தக் குழுவில் இருந்த ஒரு பெண்மணி, அவர் ஒரு முஸ்லிம் பெண். முதலில் அவளுடைய சில கலாச்சார அடையாளங்கள், இந்த வேலைக்குத் தடையாக இருப்பதாக அவளும் அவளுடைய குடும்பமும் உணர்ந்தார்கள். ஆனால் அதன்பின்னர் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் இந்த நிலை தவிர்க்கப்பட்டது. அந்த பெண்மணி திறமையானவராக முழு ஈடுபாட்டுடன் வேலைத்திட்டத்தில் செயற்பட்டது, சாதகமான அறிகுறியாக இருந்தது.

அதுமட்டுமல்லாமல் இந்தக் குழுவில் இருந்த அனைவரும், மற்ற குழுக்களுடன் தொடர்பில் இருக்கிறார்கள். எனவே வழங்கப்பட்ட அறிவை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது.

ஏன், 50 புகைப்படங்களைப் பயன்படுத்தி சமூகத்தில் தெளிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சூம் (Zoom) தொழில்நுட்பத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் பெற்ற அறிவு,

மேலும், இந்தத் திட்டத்தின் முந்தைய மற்றும் பிந்தைய மதிப்பீடுகளில் கிடைக்கப்பெற்ற கருத்துக்கள் சிறந்த மட்டத்தில் இருந்தன.

இந்த திட்டம் உலகளாவிய கலாச்சார குடிமக்களை உருவாக்குவதற்கான பயணமாகும். இது இன்றைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டது அல்ல. “நாளை தினத்திலும் இந்தப் பயணத்தில் செல்ல வேண்டியுள்ளது”

**செயற்படுத்தல் - ஒஷான் குணதிலக**

# අපේ ආරක්ෂාව ශක්තිමත් කරමු . . .

ආරක්ෂාව කියන්නේ හරිම වැදගත් දෙයක්. ආරක්ෂාවට විශාල වටිනාකමකුත් තියනවා. ඉතින් ඒ ආරක්ෂාව අපි කොහොමද ශක්තිමත් කරගන්නේ.......

## ඇයි ආරක්ෂාවක්.....

අපි හැමෝම විවිධ අවස්ථාවල විවිධ හේතුමත තිබෙන ආරක්‍ෂාව තවත් ශක්තිමත් කරගතයුතු වෙනවා.

මොකද ආරක්‍ෂා වීම පෞද්ගලිකත්වයටත්, පොදු සමාජයටත් බලපානවා. ඒක එහෙම තමයි වෙන්නේ. ඉතින් පසුගිය 2020 වසර අපි හැමෝගෙම ආරක්‍ෂාව වැඩිකරගන්න උත්සාහ කරපු වසරක්. ඒ වගේම ලෝකයම ආරක්ෂාව පිළිබඳ සැළකිලිමත් උනා. ඒ කෝවිඩ් 19 නිසා.

අපි දැක්කා කෝවිඩ් 19 වාතාවරණය තුළ කාන්තාවන් හා තරුණයන් විශේෂ අවදානමකට ලක්වන හැටි. සමහර අයට මේක තේරුම් ගන්නත් බැරි වුනා. නමුත් අපිට ඕන වුනා මේ තත්වය වෙනස් කරන්න.

කෝවිඩ් සම්බන්ධව වැරදි මතවාද සමාජගත වුනා. මේ සියල්ල සමාජයේ යහපැවැත්මට විශාල බාධාවක්. විශේෂයෙන්ම එම තත්වය සංහිඳියාවටත් ගැටළුවක් වුණා.

මේ ගැටළු බොහොමයකට සමාජ මාධ්‍ය වගකිව යුතුව තිබුණා. බොහෝ වේලාවට සමාජ මාධ්‍ය කොවිඩ් ගැන වැරදි තොරතුරු සමාජ ගත කළා. ඒ වගේම සාමකාමී සමාජයක් ගොඩනගන්න සමාජ මාධ්‍ය උත්සහා ගත්තේම නැති තරම්. වෛරී ප්‍රකාශ, ජනවර්ග වෙනස් කොට සැළකීම, ස්ත්‍රී පුරුෂ භාවය මේ ගැන කිසිම සදාචාරාත්මක බවක් තිබුනේ නෑ.

## අපේ ආරම්භය

අපි ප්‍රජාව දැනුවත් කිරීමේ වැඩවලට ස්වේච්ඡාවෙන් සම්බන්ධ වීමට කැමති අයට ඒ සඳහා ඉදිරිපත් වෙන්න කියලා ප්‍රචරණ වැඩ පිළිවෙලක් දියත් කළා. ඒ සඳහා 2021 පෙබරවාරි මාර්තු කාලවල දිස්ත්‍රික්ක 9ක මිශ්‍ර ජනවාර්ගික පුද්ගලයන් 29 දෙනෙක් සහ කණ්ඩායම් ස්වේච්ඡා ක්‍රියාකාරීන් ලෙස පළමු මට්ටමේ ව්‍යාපෘති ක්‍රියාකාරකම් සඳහා ඉල්ලුම් කර තිබුණා. තවත් 16 දෙනෙකු දත්නා ජාලවලින් සම්බන්ධ වුණා.

ව්‍යාපෘති දිශානතිය සඳහා සහභාගීවන්නන් 17 දෙනෙකු සහභාගී වූ අතර පුළුල් සහභාගීත්වය සඳහා ද්වි භාෂාව යොදා ගත්තා. මේ පිරිස දිස්ත්‍රික්ක 6ක් නියෝජනය වූ අතර විශේෂයෙන් ම ව්‍යාපෘති කටයුතු වලට හඳුනාගත් ප්‍රධාන කණ්ඩායම් පහක නායකයින් සහභාගී වුණා. (නුවරඑළිය, වව්නියාව, අනුරාධපුරය, මොණරාගල, මහනුවර)

මේ කණ්ඩායමේ සිංහල හා දෙමළ භාෂා දෙකම නියෝජනය කරන අය හිටියා. අපේ ප්‍රධානතම ඉලක්කය සමාජ මාධ්‍ය යොදාගෙන අපේ වැඩපිළිවල ඉදිරියට ගෙන යන එක. ඉතින් මේ කණ්ඩායමට විශේෂ පුහුණුවක් ලබා දීමට අපි තීරණය කළා. මේ පුහුණුව මුහුණට මුහුණ හමුවක් තුලින් පවත්වන්න සැළසුම් කලත් කෝවිඩ් තත්වය ඊට බාධාවක් වුණා. ඊටපස්සේ ඔන්ලයින් තාක්ෂණයත් උපයෝගී කරගෙන වැඩමුළුව සංවිධානය කෙරුනා.

වැඩමුළුව දින හතරකට සංවිධානය කෙරුණා. එක් දිනකට විනාඩි 45 බැගින් විශේෂ මාතෘකා හතරක් යටතේ. මේ සියලු සැසි කෙටි දැනුවත් කිරීම් ලෙසයි පැවැත්වුණේ.

මෙම ව්‍යාපෘතියේ ප්‍රජා උපදේශකයින් බවට පත් කිරීම සඳහා ක්‍රියාකාරී නියැලීම පෙන්නුම් කළ සහ ව්‍යාපෘති සමාජකරණ ක්‍රියාකාරකම් වලට සහාය වූ තෝරාගත් සහභාගිවන්නන් නම් කරන ලදී.

මෙම ව්‍යාපෘතියේ තවත් අංගයක් වූ, ජාතික මට්ටමේ උපදේශක කණ්ඩායමක් සඳහා පුහුණුවක් 2021 ජූනි 12,13 සහ 20 යන දිනවලදී පැවැත්විණි.

මෙය සංවාදාත්මක ලෙස පැවැත්විණි, මෙහිදී විශේෂත්වය වූයේ පෙර ස්වෙච්ඡා ක්‍රියාකාරීන් කැඳවුම් නොකර (කාලය අතර සුදුසු ක්‍රියාකාරීන් තෝරාගැනීම සඳහා) සමාජ මාධ්‍ය තුල ක්‍රියාකාරී වූ, නිර්මාණකරුවන් (content creators, Page / group admins) සහ විවිධ වෘත්තීන් සහභාගී කරගත්තා. ඔවුන් විවිධ පසුබිම්වලින්, ස්ත්‍රී පුරුෂ, විවිධ ජනවාර්ගික, අය වශයෙන් තෝරා ගත්තා. මෙම දැනුවත් කිරීම සහ සංවාදාත්මක වැඩසටහන සමාජ මාධ්‍ය ආචාර ධර්ම ප්‍රවර්ධනය කිරීම කෙරෙහි අවධානය යොමු කරන ලදි. මෙහි වැඩි වශයෙන් සමාජ මාධ්‍යවල ස්ත්‍රී පුරුෂභාවය පිළිබඳ සහ අසත්‍ය ප්‍රවෘත්ති සහ වැරදි තොරතුරු සම්බන්ධයෙන් කටයුතු කිරීම ගැන සහ ඒවා සිදුවෙන සාධක ඒවගේම වැලැක්වීම සඳහා දැනුවත්භාවය, ප්‍රචාරණය පිළිබඳ වැඩි වශයෙන් සාකච්ඡාව කළා.

වගකිවයුතු සමාජ මාධ්‍ය භාවිතා කරන්නන් සහ අන්තර්ගත නිර්මාපකයින් සහ පිටු/සමූහ පරිපාලකයින් ලෙස සමාජ මාධ්‍ය ආචාර ධර්ම ප්‍රවර්ධනය කිරීමට අප සැමට කාර්යභාරයක් ඇති බව සූක්ෂම ලෙස ප්‍රකාශ කිරීමට අපට අවශ්‍යය විය.

මෙය ඉතා ආකර්ශණීය සැසියක් වූ අතර බොහෝ දෙනෙක් සාකච්ඡා සඳහා හොඳින් දායක වූහ. ඔවුන්ගෙන් සමහරක් තරුණයන් පසුව සර්වෝදය මගින් පැවැත්වූ සැසිවාරවලට ද සහභාගි වූහ.

ලක්ෂ 12 ක්,

ලක්ෂ 12කට ආසන්න subscribers සිටින සමාජ මාධ්‍ය ජාල හරහා දියත් කෙරුණා. මේ අතරින් 10,000 පමණ reactions ලැබී තිබුණා.

තරුණයින් මෙම සටහන් වලින් සමහරක් ඔවුන්ගේම සමාජ මාධ්‍ය ගිණුම් හරහා බෙදා ගත් අතර මොණරාගල තරුණයින් දෙදෙනෙකු පැවසුවේ සැසියෙන් ඉගෙන ගැනීම වඩාත් කල්පනාකාරී, දයානුකම්පිත සහ ඇතුලත් පණිවිඩ නිර්මාණය කිරීමට උපකාරී වූ බවයි.

Video 03. . .

කාටූන් චරිත යොදාගෙන විශේෂ වීඩියෝ පට 3 ක් නිර්මාණය කළා. මේක කාලය විනාඩි 2 කට සීමා කළා. කෝවිඩ් සම්බන්ධ තොරතුරු පිළිබඳව සැලකිලිමත් වීම, සමාජයේ ඇති මතවාද පිළිබඳව දකින දෘෂ්ටිය, කොහොමද එය හරි විදියට දකින්නේ,

**සමාජ මාධ්‍ය හැසිරීම් පිළිබඳව**

Online Activities

තවත් සිත්ගන්නා සුළු ක්‍රියාකාරකම් මාලාවක් වූයේ අප Fb Live, webinar, Youtube video සහ Facebook Instergram සජීවී ව සිදුකළ සෘජු සමාජ මාධ්‍යයේ නියැලීමයි.

මේවා හරි හරවත් සංවාද ගොඩනගන්න සාර්ථක වුණා. එය සමාජයේ විවිධ තලවල සිටින ස්ත්‍රී පුරුෂ හා තරුණ අය මුල් කරගෙන සුදුසු කාලවල පැවැත්වුණා. සියලු ඒවා. ඉතාමත් හොඳ ප්‍රතිචාර ලබාගත් ඒවා වූ අතර තරුණ සංවාදය නියෝජනය කරමින් Instergram තුළ පැවති සැසිය සඳහා Comments 400කට වඩා ලැබුණා. මේ හරහා අප බලාපොරොත්තු වූ ආකාරයට මේ සැසි මෙහෙය වූ Influencers ලා අප කල දැනුවත් කිරීම් සහ සමාජ ගැටළු හඳුනාගෙන මෙවැනි මාතෘකා ගැන දිගින් දිගටම කතාකරන බව සඳහන් කළා.

**අත්දැකීම්**

ස්වෙච්ඡා ක්‍රියාකාරීන් සොයා ගැනීම මුලදී පහසු නොවීය, නමුත් ඔවුන්ට ව්‍යාපෘති අරමුණු පැහැදිලි කිරීමෙන් පසු, එම කටයුතු සඳහා කැමැත්ත පළ කර සිටිය ද සමහර අයට එම සැසි තිබුණ දින වල තිබුණ උපකාර පන්ති, කාන්තාවන්ගේ ගෙදර කාර්යබහුලත්වය, වැනි දේවල් නිසා සහභාගීත්වය කළමනාකරණය කිරීම තරමක් අපහසු වුණා. අපි සන්නිවේදනය සඳහා Whatsapp Group එකක් භාවිත කරා. එය තරමක් ලේසි වුණත්, සමහර අය මෙවැනි ව්‍යාපෘති දැනුවත් කිරීම් වැඩසටහන සහ අනෙකුත් කටයුතු වලට තරමක් මැලිකමක් දැක්වූවා. මේ නිසාම සිද්ධ වුණා ඒ අය එක්ක විශාල වශයෙන් සම්බන්ධ වෙමින් ඔවුන් ව උත්තේජනය කරන්න.මේකෙ ඇති වැදගත්කම පසුව ඔවුන්ට ලැබෙන දැනුම, ගැන නිතර මතක් කිරීම් කරන්න වුණා.

මුල සිට රැඳී සිටි කිහිප දෙනෙක් අවසානය, සහ දෙවැනි කණ්ඩායම සඳහා පැවැත්වූ සැසි වලට ද සම්බන්ධ වුණා.

අපේ දෙවැනි සාකච්ඡා වටයේ නියැලීම සහ සහභාගීත්වය ඉතා හොඳයි. ඔවුන්ගෙන් බොහෝ දෙනෙක් (සමූහ පාලකයින් / Group admins, වෘත්තිකයන්, Counselors) පැවසුවේ මෙය ඔවුන්ගේ මෙවැනි සංකල්ප පිළිබඳ සම්බන්ධ වූ පළමු පුහුණු අත්දැකීම බවයි.

**ක්‍රියාත්මක කිරීම - ඉමාලි ජයවර්ධන**

# எமது பாதுகாப்பை வலுப்படுத்துவோம்..

பாதுகாப்பு என்பது மிக முக்கியமான விடயம். பாதுகாப்புக்கும் பெரும் மதிப்பு உண்டு. அப்படியென்றால் அந்த பாதுகாப்பை நாம் எவ்வாறு பலப்படுத்துவது......

**ஏன் பாதுகாப்பு.....**

நாம் அனைவரும் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு காரணங்களுக்காக இருக்கும் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

ஏனென்றால் பாதுகாப்பாக இருப்பது, தனியுரிமையையும் சமூகத்தையும் சார்கிறது. அது அவ்வாறுதான் நடக்கும். எனவே கடந்த 2020 ஆம் ஆண்டு, நாம் அனைவரும் நமது பாதுகாப்பை அதிகரிக்க முயற்சித்துக் கொண்டிருந்த ஆண்டாகும். அதேபோன்று உலகமும் பாதுகாப்பு குறித்து கூடுதல் கவனம் செலுத்தியிருந்தது. அதற்கு காரணம் கொவிட் 19 வைரஸ் பரவல் நிலையாகும்.

கொவிட் 19 சூழலில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் கூடுதல் அவதானத்திற்கு உரியவர்களாக இருந்ததை நாம் அவதானித்தோம். மேலும் ஒரு சிலருக்கு இதைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. ஆனால் நாம் இந்த நிலையை மாற்ற விரும்பினோம்.

கொவிட் 10 வைரஸ் பற்றிய தவறான கருத்துக்கள் சமூகத்தில் அதிகளவில் பரவின. இவை அனைத்தும் சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு பெரும் தடையாக காணப்பட்டது. குறிப்பாக அந்தச் சூழல் நல்லிணக்கத்துக்கும் பிரச்சினையாகவே இருந்தது.

இதுபோன்ற பல பிரச்சினைகளுக்கு சமூக ஊடகங்கள் பொறுப்புக்கூற வேண்டியதாக இருந்தது. பெரும்பாலான நேரங்களில் சமூக ஊடகங்கள் கொவிட் 19 வைரஸ் பற்றிய தவறான தகவல்களை சமூகத்திற்கு வழங்கி வந்தது. அதேபோன்று சமூக ஊடகங்கள் ஒரு அமைதியான சமூகத்தை உருவாக்க முயற்சித்ததில்லை. வெறுக்கத்தக்க பேச்சு, இனப் பாகுபாடு, ஆண், பெண் பாலின வேறுபாடு இவை அனைத்தும் நெறிமுறையற்றவையாகவே காணப்பட்டது.

**எங்கள் ஆரம்பம்**

சமூகத்தை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தில் நேரடியாக தொடர்புகொள்ள விரும்புபவர்களுக்கு, அதற்கென முன்வருமாறு விளம்பரப் பிரச்சாரத்தை நாங்கள் தொடங்கினோம்.

இதற்காக, 2021 பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் நாட்டில் 9 மாவட்டங்களில் உள்ள 29 கலப்பு இன தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தன்னார்வலர்களாக முதல் நிலை திட்ட நடவடிக்கைகளுக்கு விண்ணப்பித்திருந்தனர். மேலும் 16 பேர் தெரிந்த வலையமைப்புக்களில் இருந்து எம்முடன் இணைந்தனர்.

திட்ட நோக்கு நிலையில் 17 பங்கேற்பாளர்கள் இருந்தனர் மற்றும் விரிவான பங்கேற்புக்கு இருமொழி பயன்படுத்தப்பட்டது. இந்த குழுவினர் ஆறு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் காணப்பட்டனர். மற்றும் திட்டத்திற்காக குறிப்பாக அடையாளம் காணப்பட்ட ஐந்து முக்கிய குழுக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (நுவரெலியா, வவுனியா, அனுராதபுரம், மொனராகலை, கண்டி)

இந்தக் குழுவில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினர் இருந்தனர். எங்கள் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதே எங்கள் முதன்மையான குறிக்கோளாக காணப்பட்டது. எனவே இந்த அணிக்கு சிறப்பு பயிற்சி அளிக்க நாம் முடிவு செய்தோம். பயிற்சியை நேருக்கு நேர் நடத்த திட்டமிடப்பட்டிருந்தாலும், கோவிட் நிலை அதற்கு பாதிப்பாக அமைந்தது. அதன்பின்னர் ஒன்லைன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிற்சிப் பட்டரை ஏற்பாடு செய்யப்பட்டது.

பயிற்சிப் பட்டறை நான்கு நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நான்கு சிறப்பு தலைப்புகளின் கீழ் ஒவ்வொரு நாளும் 45 நிமிடங்கள். இந்த அமர்வுகள் அனைத்தும் சுருக்கமான விளக்கமாக நடத்தப்பட்டன.

இந்த திட்டத்திற்கு சமூக ஆலோசகர்களை தெரிவுசெய்வதற்கு, செயல்திறனை வெளிப்படுத்திய மற்றும் திட்ட சமூகமயமாக்கல் நடவடிக்கைகளில் உதவிய , தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் பரிந்துரைக்கப்பட்டனர்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2021 ஜூன் 12, 13 மற்றும் 20 ஆகிய திகதிகளில் தேசிய அளவிலான ஆலோசனைக் குழுவிற்கான பயிற்சி நடைபெற்றது.

பயிற்சி ஒழுங்கமைப்பட்ட வகையில் இடம்பெற்றது. இதன்போது விசேட விடயமாக அமைந்தது, தன்னார்வலர்களை அழைக்காமல் (காலத்திற்கு ஏற்ற பொருத்தமான செயற்பாட்டாளர்களை தெரிவுசெய்வதற்கென) சமூக ஊடகங்களில் செயற்பாட்டிலுள்ள படைப்பாளிகள் (ஊழவெநவெ உசநயவழசள இ ியபந ஃ பசழரி யனஅளைெ) மற்றும் பல்வேறு தொழில்களைச் சேர்ந்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் வெவ்வேறு பின்னணிகள், பாலினங்கள், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த விழிப்புணர்வு மற்றும் உரையாடல் நிகழ்ச்சி சமூக ஊடக நெறிமுறைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. சமூக ஊடகங்களில் பாலினம் மற்றும் தவறான செய்திகள் மற்றும் தவறான தகவல்களைக் கையாள்வது குறித்தும், அதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரம் குறித்தும் நிறைய விவாதங்கள் நடந்தன.

பொறுப்புமிக்க சமூக ஊடகங்களை பயன்படுத்துவோர் மற்றும் உள்ளக ரீதியிலான உருவாக்குபவர்கள் மற்றும் பக்கம் ஃ குழு நிர்வாகிகள் என சமூக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிப்பதில், நம் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை நுட்பமாக கூற எமக்கு தேவைப்பட்டது.

இது மிகவும் சுவாரசியமான அமர்வாக இருந்ததுடன், பலர் விவாதங்களுக்கு நல்ல பங்களிப்பை வழங்கினர். அவர்களில் சில இளைஞர்கள், பின்னர் சர்வோதய மூலம் நடத்தப்பட்ட அமர்வுகளிலும் கலந்து கொண்டனர்.

**12 லட்சம்,**

கிட்டத்தட்ட 1.2 மில்லியன் subscribers உள்ள சமூக ஊடக வலையமைப்பின் மூலம் இது தொடங்கப்பட்டது. இதற்கு சுமார் 10,000 reactions கிடைக்கப்பெற்றிருந்தது.

இளைஞர்கள் இந்த குறிப்புகளில் சிலவற்றை தங்கள் சொந்த சமூக ஊடக கணக்குகள் மூலம் பகிர்ந்து கொண்டனர் மற்றும் மொனராகலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள், அமர்விலிருந்து கற்றுக்கொள்வது மிகவும் சிந்தனைமிக்க, இரக்கமுள்ள மற்றும் உள்ளடக்கிய செய்திகளை உருவாக்க உதவியது என்று கூறினார்கள்.

Vedio 03...

கார்ட்டூன் கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி, 3 சிறப்பு வீடியோக்களை உருவாக்கப்பட்டது. அதற்கான நேரம் 2 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. கொவிட் வைரசுடன் தொடர்புடைய தகவல்கள் குறித்து கவனம் செலுத்தல், சமூகத்தில் இனவாத கருத்துக்கள் தொடர்பில் பார்க்கும் முறை, அதனை எவ்வாறு சரியான முறையில் பார்ப்பது..

**சமூக ஊடக நடத்தை பற்றி**

Online Activities

நாம் நேரலை செய்த மேலும் சில செயற்பாடுகள், FB live, Webinar, Youtube Vedio மற்றும் ஐளெவநசபசயஅ ஆகிய நேரடி சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டது.

இவை அர்த்தமுள்ள உரையாடல்களை உருவாக்குவதில் வெற்றி பெற்றன. இது சமூகத்தில் பல்வேறு நிலைகளிலுள்ள பெண்கள், ஆண்கள், இளம் பராயத்தினரை இலக்காகக் கொண்டு, உரிய காலத்தில் நடத்தப்பட்டது. சகல விடயங்களும், மிகச் சிறந்த பதிலீட்டைப் பெற்றுக்கொண்டதோடு, இளைஞர்களின் உரையாடலைப் பிரதிநிதித்துவப்படுத்தி Instergram மில் நடைபெற்ற அமர்வுக்கு 400 க்கும் மேற்பட்ட Comments கிடைக்கப்பெற்றது. பெற்றனர். எதிர்பார்த்தது போலவே, அமர்வுகளை நடத்திய Influencers, எங்கள் விழிப்புணர்வு மற்றும் சமூகப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, இதுபோன்ற தலைப்புகளைப் பற்றி தொடர்ந்து பேசுவோம் என்று கூறினார்கள்.

**அனுபவம்**

தன்னார்வலர்களை கண்டுபிடிப்பது முதலில் எளிதாக இருக்கவில்லை. ஆனால் திட்ட நோக்கங்களை அவர்களுக்கு விளக்கிய பிறகு, சிலர் தாமாகவே முன்வந்து விருப்பம் தெரிவித்தனர். எனினும் பயிற்சி வகுப்புகள், பெண்களின் வீட்டு வேலைகள் போன்றவற்றால் இதில் பங்கேற்பது சிலருக்கு கடினமாக இருந்தது.


தகவல்தொடர்புக்கு நாங்கள் whatsapp Group ஒன்றை பயன்படுத்தினோம். இது சற்று எளிதாக இருந்தாலும், சிலருக்கு இதுபோன்ற திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் பிற செயல்பாடுகளை செய்ய கொஞ்சம் தயக்கம் இருந்தது. இதன் காரணமாக அவர்களுடன் அதிகம் பழகவும் அவர்களைத் தூண்டவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் காணப்படும் முக்கியத்துவம், பின்னர் அவர்களுக்கு கிடைக்கும் அறிவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில், தொடர்ச்சியாக அவர்களுக்கு நினைவூட்ட வேண்டி ஏற்பட்டது.

தொடக்கத்தில் இருந்தே தங்கியிருந்த ஒரு சிலர், இறுதி மற்றும் இரண்டாம் குழுவினருக்கென நடத்தப்பட்ட அமர்வுகளில் இணைந்தனர்.


எங்களின் இரண்டாம் சுற்று விவாதங்களும், பங்கேற்பும் சிறப்பாக இருந்தது. அவர்களில் பலர், (குழு மேலாளர்கள்/Group Admin, தொழில் வல்லுநர்கள், உதாரணமாக ஊழரளெநடழசள) இது போன்ற கருத்துகள் தொடர்பில் தமக்கு கிடைக்கப்பெற்ற முதல் பயிற்சி அனுபவம் இது என்று கூறினார்கள்.

**செயற்படுத்தல் - இமாலி ஜயவர்தன**


SMILE
WILL
CARRY US THROUGH


COVID19 & EDUCATION AWARENESS CAMPAIGN
"Spread facts, not fear""
AHA!


SRI LANKA
3.50
2.00
Fonseka
AHA!
Sarvodaya


STOP
SPREAD
OF GERMS
This project is funded by
AHA!
Covid 19 Awareness
Spread Facts Not Fear


COVID19 & EDUCATION AWARENESS CAMPAIGN
"Spread facts, not fear""
36. Farm Road, Uppuveli, Trincomalee
eegaisrilanka@gmail.com


COVID-19 AWARENESS
"Spread Facts, Not Fear"
ALL THE WORLD'S A STAGE !




AHA!
This project is funded by






STOP
THE SPREAD
OF GERMS
AHA!
Awareness with Human Action
This project is funded by
Covid 19 Awareness
Spread Facts Not Fear




තොරතුරු තාක්ෂණ අංශය
භාවිතා කරන ඔබට ...

SARVODAYA

Sarvodaya Headquarters,

"Damsak Mandira"

No 98, Rawatawatta Road, Moratuwa, Sri Lanka.

+94-112647159 +94-112656521

www.sarvodaya.org